தொலைநோக்குடன் சிந்திப்போம் ! கல்வியை சீரமைப்போம் !!

# 7000 இடைநிலை ஆசிரியர் ஊதிய மீட்புக்குழு

*(Before 01.06.2009 Appointment process)*

email : muneesgos1183@gmail.com

அலுவலகம் : 6/33-1A, குடித்தெரு, ரெங்கம்பாளையம், கொங்கணாபுரம், எடப்பாடி (TK), சேலம்-637102.

ஒருங்கிணைப்பாளர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச.முனீஷ் | இரா.இராம்குமார் | நீ.இளையராஜா | மு.முருகையா | எல்.மணி | பொ.கவிதா |
| 81444 11881 | 94436 54642 | 96556 69990 | 96268 57668 | 94424 11099 | 94432 12005 |
| இரா.இராஜன் | சே.வினோத் | ர.ராஜேஷ் | க.அரசு | இர.காந்தி | J.A.டார்வின் |
| 97913 63697 | 98948 14819 | 99650 43313 | 94870 11595 | 94865 64564 | 96003 66173 |


## அறிக்கை

### SSTA இயக்க தலைமைக்கு அன்புகலந்த வணக்கம்

❖ 2009ஆம் ஆண்டு நியமனமான 7000 ஆசிரியர்களின் ஊதிய பாதிப்பானது இந்த 7000 ஆசிரியர்களும் 5-வது ஊதியக்குழு ஊதிய விகிதமான 4500-125-7000-ன் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு, 6-வது ஊதியக்குழு திருத்த அரசாணை எண்.258 நாள்.23.06.2009ன் அடிப்படையில் இவ்வரசாணை நடைமுறைப்படுத்தப்பட்ட நாள்முதலே இருந்துவரும் ஊதிய பாதிப்பு என்பதைத் தாங்கள் உட்பட அனைத்து சங்க நிர்வாகிகளும், ஆசிரிய நண்பர்களும் அறிந்த ஒன்றே.

❖ 2009ஆம் ஆண்டு நியமனமான 7000 ஆசிரியர்களின் ஊதிய பாதிப்பை அரசின் கவனத்திற்கும், உயர் அலுவலர்களின் கவனத்திற்கும் எடுத்து செல்லும் முயற்சியை மூத்த ஆசிரியர் இயக்கங்கள் வழியாக எடுத்துச்சென்றதன் பயனாக, “2011ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் ரூ.750/- தனி ஊதியம் வழங்கப்பட்டு, மீண்டும் கழக ஆட்சி அமைந்தவுடன் ஊதிய பாதிப்பு முழுமையாக சரிசெய்யப்படும்” என்ற வாக்குறுதியும் முத்தமிழ் அறிஞர் அவர்களால் வழங்கப்பட்டது. அன்றைய நாளில் 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுக்கான TET நியமனங்கள் இல்லை என்பது தாங்களும் அறிந்த உண்மையே.

❖ இவ்வாறு ரூ.750/- தனி ஊதியமாக வழங்கப்பட்டது முதல் நாளதுவரை 7000 ஆசிரியர்களின் ஊதிய பாதிப்பை சரிசெய்யும் வகையில் தொடர்ந்து உயர்அலுவலர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவிற்கும், நாங்கள் தனிப்பட்ட முறையிலும், மூத்த ஆசிரியர் இயக்கங்களின் வழியாகவும் கோரிக்கை அளித்து வருகிறோம்.

❖ தாங்களும் தங்களது SSTA எனும் அமைப்பின் மூலம், “சம வேலைக்கு சம ஊதியம்” என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் 01.06.2009க்கு முன் நியமிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுவரும் ஊதியத்தை 01.06.2009க்குப் பின்னர் நியமிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டும் என்ற முயற்சியை முன்னெடுத்து வருவதும் அனைத்து சங்க நிர்வாகிகளும், ஆசிரிய நண்பர்களும் அறிந்த ஒன்றே.

**7000 இடைநிலை ஆசிரியர் ஊதிய மீட்புக்குழுவின் செயல்பாடானது,**

- TRB Notification Advt. No. 01/2009 நாள்.12.01.2009ன்படி,
- TRB பதிவேடுகளில் 2008-2009 கல்வி ஆண்டிற்கான நியமனமாகவும்,
- Selection Process அறிவிப்பு மற்றும் ஆணைகளில் 4500-125-7000 ஊதிய விகிதத்தில் சான்றிதழ் சரிபார்ப்பு முடிவுற்று,
- 01.06.2009க்கு முன்பே அனைத்து விதமான Selection Process-களும் நிறைவு பெற்று,
- 2009-லோக்சபா தேர்தல் எதிரொலியாலும்,
- பெருந்தலைவர் காமராஜர் பிறந்த தினமும் கல்விவளர்ச்சி நாளுமாகிய ஜூலை-15 நன்னாளில் பணியேற்க செய்திடல் வேண்டும் போன்ற நிர்வாகக்காரணங்களுக்காகவும்
- 31.05.2009க்கு முன்பு நியமனம் செய்யப்பட வேண்டிய 7000 இடைநிலை ஆசிரியர்கள்
- தாமதமாக பணியேற்கும் நிலை ஏற்பட்டதால் உருவான ஊதிய இழப்பினை அரசின் கவனத்திற்கு எடுத்துச்சென்று 7000 ஆசிரியர்களுக்கு தகுதியிருந்தும் விடுபட்ட ஊதியத்தினை மீட்கும் நோக்கில் அமைந்துள்ளதாகும்.

**தங்களது SSTA எனும் அமைப்பின் செயல்பாடானது**

(தங்களது அஜண்டா என்னவென்று எங்களுக்கு தெரியாது - தாங்கள் வெளியிடும் அறிக்கைகள் மூலம் அறிந்ததன் அடிப்படையில்),

- “சம வேலைக்கு சம ஊதியம்”
- “ஒரு நாள் ஊதிய வித்தியாசம்” என்னும் அடிப்படையில் 2009ஆம் ஆண்டு நியமனம் பெற்ற 7000 ஆசிரியர்கள், 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டு TET தேர்வு மூலம் நியமனம் பெற்ற 13000 ஆசிரியர்கள் என 20,000 ஆசிரியர்களுக்கு தீர்வு பெறும் நோக்கில் அமைந்துள்ளதாகும்.

**ஆக, 7000 ஆசிரியர்களுக்காக நாங்கள் முன்னெடுத்துள்ள கோரிக்கையும், 20000 ஆசிரியர்களுக்காக தாங்கள் முன்னெடுத்துள்ள கோரிக்கையும், வெவ்வேறு ஆதாரங்களையும் வெவ்வேறு ஆவணங்களையும் அடிப்படைக் காரணங்களாகக் கொண்ட இணையவியலா இருவழிப்பாதையாக அமைந்துள்ளது என்பது நிதர்சனம்.**

**மேலும் எங்களது நோக்கம் யாரையும் விமர்சிக்காமல், கடுஞ்சொற்கள் பயன்படுத்தாமல், மூத்த ஆசிரியர் இயக்கங்களின் நல்லாதரவுடன், எங்களது நிலையை ஆதார ஆவணங்களுடன் உரிய வழியாக உரிய முறையில் பணிவுடன் அரசுக்கு எடுத்தியம்பி அரசின் கருணையை எதிர்நோக்கிய பயணமாக அமைந்ததாகும்.**

ஆனால், தங்களது அமைப்பின் பெயரிலும் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பெயரிலும் சமூக வலைதளங்களில் வெளியிடப்படும் பெரும்பாலான பதிவுகளில்,

- 2009 நியமன 7000 ஆசிரியர்களுக்கு மட்டும் தனியாக அரசு செய்யாது என்றும்
- 2009 ஆசிரியர்களுக்கு மட்டும் கிடைக்காது என்றும்,
- 2009 நியமன ஆசிரியர்களும் ஒருங்கிணைப்பாளர்களும் காமெடியன்கள் என்றும்,
- 2009 நியமன ஆசிரியர்களும் ஒருங்கிணைப்பாளர்களும் கோமாளிகள் என்றும்,
- 2009 நியமன ஆசிரியர்களும் ஒருங்கிணைப்பாளர்களும் கூமுட்டைகள் என்றும்,
- 2009 நியமன ஆசிரியர்களும் ஒருங்கிணைப்பாளர்களும் இனத்துரோகிகள் என்றும்,
- 2009 நியமன ஆசிரியர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களின் "வளர்ப்பு அப்படி" என்றும்,

தொடர்ந்து பதிவிட்டு வருவது அநாகரீகமானதோடு மட்டுமல்லாமல் சமுதாயத்தை சீரமைக்கும் மகத்தான பணியை மேற்கொள்ளும் ஆசிரியர்களை வழிநடத்தும் ஒரு ஆசிரிய சங்கத்தலைமைக்கும் நிர்வாகிகளுக்கும் அழகல்ல என்பதையும் தங்களுக்கு நாங்கள் சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

குறிப்பாக,

1. அரசு 7000 ஆசிரியர்களுக்கு செய்யுமா? 20000 ஆசிரியர்களுக்கு செய்யுமா? அல்லது ஒட்டுமொத்த ஆசிரியர்களுக்கும் செய்யுமா? நிலுவையுடன் செய்யுமா? நிலுவையில்லாமல் செய்யுமா? என்பதெல்லாம் அந்தந்த சங்கங்கள் மற்றும் அமைப்புகள் அரசிடம் முன்வைக்கும் கோரிக்கைகள், ஆதாரங்கள், ஆவணங்கள் மற்றும் அவற்றின் உண்மைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையிலும் நிதிசூழ்நிலை அடிப்படையிலும், இதையெல்லாம் முழுமையாக ஆய்வு செய்துவரும் மூவர்குழுவின் அறிக்கை அடிப்படையிலும் மட்டுமே அரசு முடிவு செய்யுமே தவிர ஊகங்களின் அடிப்படையில் அரசு முடிவு செய்யாது என்பது உலகறிந்த உண்மை.

   நிலைமை இப்படியிருக்க 2009க்கு மட்டும் அரசு செய்யாது என்று பதிவிடுவதும், 2009க்கு மட்டுமென்றால் கிடைக்காது என்றும் பதிவிடுவது ஏனோ?

2. 2009 நியமன 7000 ஆசிரியர்களின் ஊதிய பாதிப்பை அரசின் கவனத்திற்கு எடுத்துச்செல்லும் ஒருங்கிணைப்பாளர்களை காமெடியன்கள், கோமாளிகள், கூமுட்டைகள் என்று பதிவிடுவது "வான் நோக்கி முகம் திருப்பி உமிழ்வது" போன்றதாகும்.

   உங்கள் இயக்கத்தின் ஆணிவேரே 2009 நியமன ஆசிரியர்கள் என்பது மறந்துபோனதோ? 2009 நியமன 7000 ஆசிரியர்களுக்கு நன்மை கிடைக்கும் வகையில் எங்களது ஊதிய மீட்புக்குழு எடுக்கும் முயற்சியின் போதெல்லாம், சமூக வலைதலங்களில் உண்மைக்கு மாறான விமர்சனங்களை வெளியிடுவதை வாடிக்கையாகக் கொண்டிருக்கும் தாங்கள், தற்போது 2009 ஆசிரியர்கள் 2000கோடி கேட்கிறார்கள் என்ற வதந்தியையும் பரப்பிவருகிறீர்கள். ஆரம்பம் முதலே எங்களது ஊதிய இழப்பை சரிசெய்து தாருங்கள் என்றே அரசிடம் முறையிட்டு வருகிறோமே தவிர, 2000கோடி என்ற வார்த்தையை எங்கள் கருத்துருவில் எங்கும் குறிப்பிடவில்லை. இதையெல்லாம் முடிவு செய்ய வேண்டியது அரசும் நிதித்துறையும்தான் என்பது தங்கள் அனுபவத்திற்கு எட்டாதது ஏனோ?

3. 2009 நியமன 7000 ஆசிரியர்களின் ஊதிய பாதிப்பை அரசின் கவனத்திற்கு எடுத்துச்செல்லும் ஒருங்கிணைப்பாளர்களை இனத்துரோகிகள் என்று பதிவிடும் முன் இதை யோசித்திருக்க வேண்டும்,

20000 ஆசிரியர்களிலிருந்து 7000 ஆசிரியர்களைப் பிரித்தாளும் ஏஜெண்ட் ஒருவரின் சூழ்ச்சியின் உதவியால் நாங்கள் பிரித்துவிட்டாதாகவும் அதனால் நாங்கள் ஆசிரியர் இனத்துரோகிகள் என்றால் 2,00,000 உறுப்பினர்களைக் கொண்ட மூத்த சங்கங்களில் பயணித்துவந்த 20,000 ஆசிரியர்களைப் பிரித்த தாங்கள் கடவுளின் மறு உருவமோ?

4. 2009 நியமன ஆசிரியர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களின் "வளர்ப்பு அப்படி" என்று பதிவிட்ட தங்களது வளர்ப்பை நாங்கள் ஒருபோதும் தவறாக கருதியது கிடையாது. ஏனென்றால் எந்தவொரு பெற்றோரும் தம் குழந்தைகளை தவறாக வளர்க்க வேண்டும் என்று கனவிலும் நினைப்பதில்லை. நீங்களும் ஒரு பெற்றோர்தானே? உங்கள் குழந்தைகளையும் நல்லமுறையில் வளர்த்து வருகிறீர்கள்தானே? நம்மிடம் பயிலும் மாணவர்களும் நம் குழ்ந்தைகள் தானே? அவர்களின் வளர்ப்பில் 50% நம் பங்கும் உள்ளதுதானே? ஒரே ஒரு கோரிக்கைக்காக ஒட்டுமொத்த பெற்றோரையும் களங்கப்படுத்த நினைத்துவிட்டீர்களே.

அத்துடன் ஆசிரியர் தலைமுறைகள் நலம்பெற போராடும் தியாகத்தலைவனாக சித்தரிக்கப்படும் தாங்கள், தங்கள் இயக்கத்தின் ஆணிவேரான 2009 ஆசிரியர்களுக்கான ஊதிய மீட்புப்பணியை முன்னெடுப்பவர்களின் ஏழேழு தலைமுறைகளும் நன்றாக வாழாது என்ற பதிவு தங்களது பெயரிலேயே வெளிவந்ததை மறக்க இயலுமா? ஒரு கோரிக்கைக்காக தரம் தாழ்ந்து தலைமுறை சார்ந்து குறிப்பிட்ட அப்பதிவு, தங்கள் இயக்கத்தின் ஆணிவேரான 2009 ஆசிரியர்களில் எத்தனை பெண்ஆசிரியர்களின் மனம் புண்பட்டது என்பதை தலைமை உணராமல் இருந்தது ஏனோ?

5. தாங்கள் தங்கள் கோரிக்கை சார்ந்து போஸ்டர் ஒட்டினால் அது சரி.
பிற இயக்கங்கள் கோரிக்கை சார்ந்து போஸ்டர் ஒட்டினால் தவறா?

6. தாங்கள் தங்கள் கோரிக்கை சார்ந்து ஆசிரியர் மனசோடு பேசினால் அது சரி.
பிற இயக்கங்களும் நாங்களும் கோரிக்கை சார்ந்து ஆசிரியர் மனசோடு பேசினால் தவறா?

7. உங்கள் மனுக்கள் ஆசிரியர் மனசுக்குள் நுழைந்தால் மனசு பூரிப்பாகுமோ?
உடன்பிறப்புகளின் மனுக்கள் நுழைந்தவுடன் மனசுக்கு உடல்வற்றிப் போய்விடுமோ?

8. உங்களுக்கு உதவியபோது ஆசிரியர் மனசெல்லாம் மத்தாப்பு!
உடன்பிறப்புகளுக்கு உதவ நினைத்தால் தப்போ தப்பு!

9. உங்களுக்கு மனசு வைத்தால் மகாஞானி!
உடன்பிறப்புகளுக்கு மனசு வைத்தால் மந்திரவாதி!

10. உங்கள் கோரிக்கையை மனசு வச்சு அமைச்சர் மனசுக்குள் கொண்டு சென்றால் அது சரி.
பிற இயக்கங்கள் கோரிக்கையை மனசு வச்சு அமைச்சர் மனசுக்குள் கொண்டு சென்றால் தவறா?

11. தாங்கள் தங்கள் கோரிக்கை சார்ந்து மதிப்புமிகு இயக்குநரை சந்தித்தால் அது சரி.
மூத்த இயக்கங்களும் நாங்களும் கோரிக்கை சார்ந்து மதிப்புமிகு இயக்குநரை சந்தித்தால் அது தவறா?

12. தாங்கள் தங்கள் கோரிக்கை சார்ந்து மதிப்புமிகு செயலாளரை சந்தித்தால் அது சரி.
மூத்த இயக்கங்களும் நாங்களும் கோரிக்கை சார்ந்து மதிப்புமிகு செயலாளரை சந்தித்தால் தவறா?

13. தாங்கள் தங்கள் கோரிக்கை சார்ந்து மூவர்குழுவை சந்தித்தால் அது சரி.
மூத்த இயக்கங்களும் நாங்களும் கோரிக்கை சார்ந்து மூவர்குழுவை சந்தித்தால் தவறா?

14. தாங்கள் தங்கள் கோரிக்கை சார்ந்து மாண்புமிகு அமைச்சரை சந்தித்தால் அது சரி.
மூத்த இயக்கங்களும் நாங்களும் கோரிக்கை சார்ந்து மாண்புமிகு அமைச்சரை சந்தித்தால் தவறா?

15. தாங்கள் தங்கள் கோரிக்கை சார்ந்து மாண்புமிகு முதலமைச்சரை சந்தித்தால் அது சரி.
மூத்த இயக்கங்களும் நாங்களும் கோரிக்கை சார்ந்து மாண்புமிகு முதலமைச்சரை சந்தித்தால் தவறா?

மேற்கண்டவாறு தங்களிடம் மனு வாங்கினால் மட்டும் நல்லவர்கள் என்று கூறுவதும் 2009 ஆசிரியர்களிடம் மனு வாங்கினால் கெட்டவர்கள் என்று தங்களது பதிவுகள் சித்தரிப்பது ஏனோ?

தங்களது இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் சமூக வலைதளங்களிலும் போராட்டக் களங்களிலும் மூத்த ஆசிரியர் இயக்கங்களையும், இயக்க பொறுப்பாளர்களையும், துறை அலுவலர்களையும், ஊதியக்குழு மற்றும் ஊதியக்குறைதீர் குழு அலுவலர்களையும், இதில் உச்சகட்டமாக இறுதியாக நடந்த போராட்டத்தில் அரசையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நேற்றுவரை விமர்சித்துவந்த நிலையில்,

எங்களது முறைப்படியான முன்னெடுப்பின் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் மூத்த ஆசிரியர் இயக்க நிறுவனர் மற்றும் பொதுச்செயலாளர்கள் ஆகிய அனைவரையும் சந்தித்த எங்களது அணுகுமுறைகளை, இன்று தாங்கள் கையில் எடுப்பது ஏனோ? இதுவரையிலும் முன்னெடுக்காமல் இருந்ததும் ஏனோ?

தனியார் யூ-டியூப் சேனல் ஒன்றிற்கு தாங்கள் அளித்த பேட்டியில், "நிதிநிலை சரியில்லை என்று சொல்வதெல்லாம் ஏமாற்றுவேலை, நிதி நிலை சரியில்லை என்று சொல்வதைவிட மனதுதான் சரியில்லை என்றுதான் சொல்லவேண்டும்" என்று கடுமையாக விமர்சித்ததன் மூலம், "தமிழ்நாட்டின் நிதிநிலை சீராக உள்ளதென தாங்கள் கூறிவிட்டு, தற்போது நாங்கள் தமிழ்நாட்டின் நிதிநிலை சீராக இல்லை என்பதை அறிந்ததால் 20000 ஆசிரியர்களுக்கும் நிலுவைத்தொகை கேட்கமாட்டோம்" என்று முன்னுக்குப்பின் முரணாகப் பதிவிட்டு வருவது ஏனோ?

மேலும் 2009 நியமன 7000 ஆசிரியர்களுக்கு மட்டும் அரசு செய்யாது என்று தங்கள் தரப்பு நண்பர்கள் இடும் பதிவுகளைப் பார்த்தால் முத்தமிழ் அறிஞரின் முழக்கமே முன்னெழுகிறது,

அதிருப்தியாளர்கள் வளர வளர
அவர்களின் மத்தியிலே
அவர்களை வழிநடத்திச் செல்லும்
தலைவன் ஒருவன்
தோன்றிவிடுவான்...

தேன் கூடும்
கஞ்சனின் கருவூலமும் ஒன்றுதான்.
காரணம், இரண்டுமே அவற்றை நிரப்பிட
உழைத்தவர்களுக்கு பயன்படுவதில்லை...

இந்த பொன்மொழிகளின் உண்மை நிலையை எங்களால் உணர முடிகிறது. தாங்களும் உணர முற்படுங்கள். தாமதம் ஏற்பட்டால் தர்மசங்கடம் தங்களுத்தான்.

முத்தமிழின் ஆட்சியில்
முதல்வரின் கனிவான அன்பில்
மனசெல்லாம் நிறையும்படி
நரைமுடித்த கிழவர்களால்
ஒட்டுமொத்த இனத்திற்கும்
ஒன்றாக விடியல் வந்துவிட்டால்...
உதவி கேட்டு இல்லம் தேடிய எங்கள் விழிகள்
நன்றிப் பெருக்கால் வடிக்கும் துளிகள்...
20000 அடிகள் ஏறிவிட்டால்
உயரம் அதிகம் தான்...
ஏணியில் 7000 படிகளே இருக்கின்றன...
இந்த 7000 படிகளுக்கும் படி அளக்க
2018ல் வாய்ப்பிருந்தும்
வழிதேடா மனம் தன்னின் குணம் கண்டு
தனக்கான வழிதேடி
தனியாகக் கூடமைத்துக் கொண்டதய்யா
தவறிய வாய்ப்பை எண்ணி
காலம் கடந்து மனம் ஏன் வெதும்புதய்யா?
எத்தனிக்கும் ஆட்சேபம் வேண்டாமய்யா!
அத்தனைக்கும் ஆதாரம் உள்ளதய்யா!

எனவே, 2009 நியமன 7000 என்ற எண்ணின் மீது பட்டியல் போட்டு
வெறுப்புணர்ச்சியால் விமர்சன சாமரம் வீசும் வீரர்களே!

இருமாப்பு வேண்டாமய்யா!
இறுக கண்ணை மூடி
யோசித்துப் பாருமய்யா!

அடிவயிற்றில் வலியிருந்தும்
அக்காமார்கள் விழித்தே இருந்தார்கள்!
தனக்கு ஏதோ கிடைக்கும் என்றல்ல...
உனக்கேதும் ஆகிவிடக் கூடாதென்று...

பலநூறு கி.மீ அயராது ஓடிவந்து...
பலனேதும் கிடைக்காமல்...
சலனமின்றி சடலமாகிப்போன
அண்ணன்மார்களின் ஆவி நினைத்தால்...
பளபளக்கும் உம் சட்டை கிழியும்...

செவி வழி செய்திதான் என்றாலும்
மறந்து போக மனம் ஒப்பவில்லை!
2009க்கு மட்டுமென்றால் எப்போதோ வாங்கியிருப்பேன்...
யார் சொன்னதோ தெரியவில்லை!
நினைக்க நினைக்க தூக்கமில்லை!

தம்பிகளுக்கு தராதே என்று கூற
எங்கள் மனமொன்றும் இரும்பல்ல!
பயணம் நெடுந்தூரம்
பசியோடு பயணிக்க முடியாது!
உயிரோடிருக்க உணவு வேண்டும்.
தருவதைப் பெற்றுகொண்டு
தம்பிகளையும் அழைத்துக்கொள்!

**2009 நியமன 7000 இடைநிலை ஆசிரியர்கள் என்று நாங்கள் கூறியதற்கு தொடர்ந்து மோசமான தகாத வார்த்தைகளால் வசைபாடிய தாங்களே 2012ஆம் ஆண்டுவரை 2009ல் நியமனமான 7000 இடைநிலை ஆசிரியர்களுக்கு மட்டுமே ஊதிய முரண்பாடு உள்ளதாக முழங்கியது தங்களுக்கு மறந்திருக்கலாம். மலரும் நினைவுகள் தங்களுக்கு கீழுள்ள இணைப்பு மூலம் நினைவூட்டப்படுகிறது.**

# 7 ஆயிரம் இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாட்டை நீக்க வேண்டும்

## மாநில பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம்

மதுரை, செப்.29-
7 ஆயிரம் இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாட்டை நீக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மாநில பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

### மாநில பொதுக்குழு

இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் இயக்கத்தின் மாநில பொதுக்குழு கூட்டம் மதுரை செயின்ட் மேரீஸ் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடந்தது. கூட்டத்துக்கு மாநில தலைவர் ரெக்ஸ்ஆனந்தகுமார் தலைமை தாங்கினார். மாநில செயலாளர் ராபர்ட் முன்னிலை வகித்தார். பொருளாளர் கண்ணன் வரவேற்றார்.

மாநில துணை தலைவர் பிலிப்குணசேகரன், துணைச் செயலாளர் வின்சென்ட், தலைமை செயற்குழு உறுப்பினர் வேல்முருகன் உள்ளிட்ட நெல்லை, தூத்துக்குடி, நாகர்கோவில், மதுரை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், ராமநாதபுரம், சிவகங்கை உள்ளிட்ட தென்மாவட்டங்களை சேர்ந்த இடைநிலை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### இடமாறுதல் வேண்டும்

கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ள தீர்மானங்கள் குறித்து மாநில செயலாளர் ராபர்ட் நிருபர்களிடம் கூறியதாவது:-

கடந்த 2009-ம் ஆண்டு ஜூலை, டிசம்பர் ஆகிய மாதங்களில் தமிழக அரசால் 7 ஆயிரம் இடைநிலை ஆசிரியர்கள் மாநில பதிவு மூப்பு அடிப்படையில் தேர்ந்து எடுக்கப்பட்டனர். 7 ஆயிரம் ஆசிரியர்களும் திருவண்ணாமலை, வேலூர், திருவாரூர், நாகப்பட்டிணம், விழுப்புரம் போன்ற தொலை தூர மாவட்டங்களில் கடந்த 3 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறோம். நாங்கள் இடமாறுதல் கவுன்சிலிங்கில் கலந்து கொள்ள இதுவரை அரசு அனுமதிக்கவில்லை. காரணம் கேட்டால் சுப்ரீம் கோர்ட்டில் தடை ஆணை இருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர். அரசு நினைத்தால் தடை ஆணையை நீக்க நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.



இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் இயக்கத்தின் மாநில பொதுக்குழு கூட்டத்தில் மாநில செயலாளர் ராபர்ட் பேசிய போது எடுத்த படம்.

### ஊதிய முரண்பாடு

நாங்கள் வெளிமாநிலங்களில் பணியாற்றி வருவதால் எங்களது குடும்பத்தினர் மிகுந்த கஷ்டத்தில் இருந்து வருகின்றனர். எனவே எங்களுக்கு இடமாறுதல் அளிக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். 2 பேர் விருப்ப மாறுதல்(மியூச்சுவல் டிரான்ஸ்பர்) கேட்டால் அதையும் அதிகாரிகள் அனுமதிப்பது இல்லை. 1.6.2009-க்கு முன்பு பணியில் சேர்ந்த இடைநிலை ஆசிரியர்கள் எங்களை விட 7 ஆயிரம் ரூபாய் அதிகமாக சம்பளம் பெறுகிறார்கள்.

நாங்கள் 2009-ம் ஆண்டு ஜூலை மாதம் பணியில் சேர்ந்துள்ளோம். ஆனால் எங்களுக்கு 7 ஆயிரம் ரூபாய் சம்பளம் குறைவாக வழங்கப்படுகிறது. ஒரு மாத இடைவெளியில் மிகப்பெரிய அளவில் ஊதிய முரண்பாடு உள்ளது. இந்த ஊதிய முரண்பாட்டை நீக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மாநில செயலாளர் ராபர்ட் கூறினார்.

29.09.2012

7000 இடைநிலை ஆசிரியர்கள் ஊதிய மீட்புக்குழுவில் பயணிப்பவர்கள் 7000 இடைநிலை ஆசிரியர்களிடம் வசூல் செய்து அவ்வாசிரியர்களுக்கு துரும்பைக்கூட எடுத்துப்போடவில்லை என்று அவதூறு செய்து வருகிறீர்கள் அதற்கான ஆதாரங்கள் உள்ளதா? எத்தனை பேரிடம் வசூல் செய்தோம் என்ற பெயர் பட்டியல் உள்ளதா?

2011ல் சுமார் 285 இடைநிலை ஆசிரியர்களிடம் மாவட்டமாறுதல் பெற்றுத்தருவதாக தலா 2000 ரூபாய் வசூல் செய்தும், பணம் கொடுத்த 285 ஆசிரியர்களுக்கு மட்டும்தான் மாவட்ட மாறுதல் கிடைக்கும் என்ற வாக்குறுதியும் தங்களால் வழங்கப்பட்ட நிலையில், அவர்களுக்கு நாளதுவரை எந்தவிதமான முன்னுரிமையும் வழங்கப்படாததால் மாவட்ட மாறுதல் பலனும் கிடைக்கப்பெறாமல் இதில் 80% பேர் அந்தந்த மாவட்டங்களிலேயே இன்றுவரை பணிபுரிந்து வருவதாக சம்மந்தப்பட்ட ஆசிரியர்கள் ஆதாரத்துடன் கூறிவருவதற்கு தங்கள் பதில் என்னவோ?

அதைத்தொடர்ந்து 2011 மற்றும் 2012 ஆண்டுகளுக்கிடையில் 7000 இடைநிலை ஆசிரியர்களில் 500க்கும் மேற்பட்டவர்களிடம் தலா 1000 ரூபாய் வசூல் செய்து, பணம் கொடுத்த ஆசிரியர்களுக்கு மட்டும்தான் ஊதிய முரண்பாடு களையப்படும் என்று வாக்குறுதி கொடுத்து குறிப்பாக ஓய்வுபெறும் தருவாயில் இருக்கிற வயது முதிர்ந்த ஆசிரியர்களுக்காகவே சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (எண்.10546/2014) தொடுக்கப்பட்டு அவ்வழக்கு எவ்வித தொடர்முன்னெடுப்புமின்றி எவ்வித பலனுமின்றி எவ்வித முடிவுமின்றி தங்களது அழுத்தம் மூலமே முடித்துவைக்கப்பட்டது என்றும், வழக்கு முடித்துவைக்கப்பட்டது சார்ந்து எவ்வித விபரமும் தெரிவிக்கப்படவில்லை எனவும் மேற்படி ஆசிரியர்கள் தவிப்புடன் புலம்பிவருவதற்கு தங்கள் பதில் என்னவோ?

இறுதியாக ஒன்று மட்டும்,

எங்கள் கரு வெளிவந்து
ஈரேழு நாட்கள் கடந்தாயிற்று...
குறையாரும் கூறவில்லை இதுவரை...
கூறினாலும் ஏற்றுக்கொள்ளும் எங்கள் மன அறை...
தியாகத்தலைவனின் கரு மட்டும்
கானல் நீராகவே தெரிகிறது...
வெளிவந்த கருவின் வீரியம்
வெற்று விமர்சனங்களால் ஒருபோதும் குன்றாது!
தொடர்ந்து முன்னேறும் எங்கள் பயணம்
ஏனென்றால் எங்கள் மடியில் கனமில்லை!
வழியில் பயமில்லை!
தற்செயலாக விமர்சித்தால் வெறுங்காலில் பயணம் தொடரும்...
எச்சிலால் விமர்சித்தால் செருப்பணிந்து பயணம் தொடரும்...

எங்களது பயணம் முழுக்க முழுக்க அரசை நம்பிய பயணமே! 2011ல் முத்தமிழ் அறிஞர் கொடுத்த வாக்குறுதியை நம்பிய பயணமே! தாங்கள் கூறிவரும் தேர்தல் வாக்குறுதி 311 ஆனது 2011ல் அப்போது பணியிலிருந்த 7000 ஆசிரியர்களுக்கு கழக ஆட்சி மீண்டும் அமைந்தவுடன் ஊதிய பாதிப்பு சரிசெய்யப்படும் என்ற முத்தமிழ் அறிஞர் கொடுத்த உறுதிமொழியை அடிப்படையாகக் கொண்ட வாக்குறுதியே!

எங்களது பயணத்திற்கு வாழ்த்துக்கூற தங்களுக்கு மனமிருக்காது!

இருந்தாலும் கூறுகிறோம் தாங்களும் வெற்றி பெற வாழ்த்துகள்!!!

நாள் : 23.11.2023
இடம் : சேலம்

இப்படிக்கு
ஒருங்கிணைப்பாளர்கள்
7000 இடைநிலை ஆசிரியர் ஊதிய மீட்புக்குழு
(Before 01.06.2009 Appointment Process)